1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஒரு ஆண்டுக்கு அல்ல, 5 ஆண்டுகளுக்கு ஒன்றியங்களிலே தொடர்ந்து நடத்தப்படுகிற திட்டம்.

திருவான்மியூரில் போடப்பட்ட குழாய்க் கிணறுகள்.

*வினா 29—திரு. **துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவியால் திருவான்மியூர் போன்ற இடங்களில் குடி தண்ணீருக்காக எத்தனை குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன ?

(ஆ) அதன் மூலம் சென்னைக்குக் குடி தண்ணீர் எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மத்திய அரசு உதவியால் திருவான்மியூரில் குழாய்க் கிணறுகள் ஏதும் போடப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: திருவான்மியூர் வரையிலே மத்திய அரசால் 8 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டதாகவும் அதை இப்போது மத்திய அரசு காலி செய்து போய்விட்டதாகவும் கூறுகிறார்கள். அங்கே 'டெஸ்ட்' கூட செய்யப்படவில்லை என்று கூறுகிறார்கள். அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல மத்திய அரசு உதவியால் திருவான்மியூரில் குழாய்க் கிணறுகள் ஏதும் போடப்படவில்லை. ஆனால் மாநில அரசின் உதவியால் 15 குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன.